மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) தரங்கம்பாடி—மங்கநல்லூர், நல்லாடை—செம்பனார் கோவில் இரண்டு சாலைகளையும் செப்பனிடுவதற்கு வெள்ள நிவாரண நிதியிலிருந்து தேவையான ஒதுக்கீடு செய்து ஒப்புறுதி அளிக்கப் பட்டுள்ளது. முதற்கண், இந்தச் சாலைகளைச் செப்பனிட ரூ. 3,35,400 பெறுமானத்திற்கு ஒன்பது (9) எஸ்டிமேட்டுகள் வெள்ள நிவாரண கோட்ட தனிப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் கேட்கப்பட்டது. எனினும் பின்னர் மேற்கண்ட சாலைகளைச் செப்பனிட ரூ. 3,50,000 பெறுமானத்திற்கு பதிமூன்று எஸ்டிமேட்டுகளாக திருத்தப்பட்டு தஞ்சை மாவட்ட ஆட்சியர் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளார். இந்தத் திருத்தப்பட்ட தொகைக்குட்பட்டு செலவை கட்டுப்படுத்தி வேலையை முடித்திட நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

*16 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 17—12—73 ஆம் தேதியன்று மழையினால் பாதிக்கப் பட்ட திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் அருகேயுள்ள அண்ணா நகர் மற்றும் அம்பேத்கார் நகர் மக்களுக்கு நிவாரண மளிக்கக் கோரி 18—12—1973-ல் முக்கூடல் நகரப் பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து மனு ஏதேனும் பெறப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) முக்கூடல் நகரப் பஞ்சாயத்துத் தலைவரின் மனுவின் கோரிக்கைப்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 58 பேர்களுக்கு, தலா ரூ. 80 வீதம் ரூ. 4,640 நிவாரணமாக வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மற்ற 7 பேர்கள் வாடகை வீட்டில் வசிப்பவர்கள். ஆதலால் நபருக்கு ரூ. 20 வீதம் 7 பேர்களுக்கு ரூ. 140 உடை உதவி மட்டும் வழங்கப்பட்டது.